**OS. No. 2 /2019**

P.W.1 - பழனி

தேதி: 16.02.2021.

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா பிராது தாக்கல் செய்த தேதி 22.10.2018 என்று சொன்னால் சரிதான். 30.11.2018 அன்று நான் வழக்கு அறிவிப்பு அனுப்பியதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னால் என் சார்பில் அ.கோ.அண்ணாமலை என்ற வழக்கறிஞரை அழைத்தும் குமார் என்ஜினியர் என்பவரை அழைத்தும் பில்டிங் மதிப்பீடு செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆனால் அ.கோ.அண்ணாமலை என்ற வழக்கறிஞரும், குமார் என்ஜினியரும் அளக்கவந்தார்கள். ஆனால் நான் சண்டை போட்டுவிட்டு போய்விட்டேன். அவர்கள் அளக்கும் போது நான் இருந்தேன் என்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரும் இருந்தார் என்றும் நான் சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. பிராதில் வாடகை பாக்கி எந்த மாதம் முதல் எந்த மாதம் வரை சொல்லவில்லை என்றால் அதை நான் பார்க்கவில்லை. வாலாஜா நீதிமன்றத்தில் ஓ.எஸ்.7/2018 என்ற வழக்கில் டிசம்பர் மாதம் முதல் வாடகை வாங்க வில்லை என்று ஒரு இடைநிலை மனுவை பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் பொய் சொல்கிறேன் என்றும் அந்த மனு ஐ.ஏ.நம்பர் 1/ 2021 என்று நம்பர் இடப்பட்டு என்னுடைய வழக்கறிஞர் அதன் நகலை வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. ஓ.எஸ. 7/2018 என்ற வழக்கில் வாலாஜா நீதிமன்றத்தில் 05.02.2021 அன்று வாய்தா வந்தது. வாய்தா முடிந்து நான் வெளியே வந்தபோது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் குமாஸ்தாவை பார்த்து

என்னிடம் ரூ.1லட்சம் இருந்தால் பிரதிவாதிகளையும் அவர் வழக்கறிஞரையும் காலி செய்துவிடுவேன் என்று மிரட்டினேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வாடகையை சரியாக தான் செலுத்திவருகிறார் என்றும் பிரதிவாதி கட்டிய கட்டிடத்தில் நான் திருமண மண்டபம் கட்டுவதற்காக பிரதிவாதிகளை வெளியேற்றுவதற்காக பொய்யான வழக்கை தாகக்ல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அரசியல் கட்சியில் இருப்பதால் ஆள்பலத்தையும், பணபலத்தையும் வைத்து பிரதீவாதிகளின் அட்வான்ஸ் பணத்தை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் தாவா சொத்திற்கு நான் நிர்ணயம் செய்துள்ள வாடகை தொகை மிகவும் அதிகமானது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா வழக்கில் போட்டுள்ள எந்த ஆவணமும் உண்மையான ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளிடம் வாடகை பெற்றுக்கொண்டு வாடகை பெறவில்லை என்று சொல்லி பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் நான் நீதிமன்றத்தில் பொய்யான சாட்சி சொல்லியுள்ளேன் என்றும் வழக்கு நடத்தும் வழக்கறிஞரை மிரட்டியுள்ள காரணத்தால் அதற்கு தனியாக கிரிமினல் வழக்கு எடுத்து நான் தண்டிக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.